






# மன்னார் கோவில்குளம்

## திருவருள் மிகு

## கற்பகபிள்ளையார் கோவில்

# திருவூஞ்சற் பாமாலை



மன்னார் கோவிற்குளம்
கற்பகபிள்ளையார் கோவில்
தற்போதைய தோற்றம்

# மன்னார் கோவிற்குளம்
# கற்பக விநாயகர்

# திருவூஞ்சற் பாமாலை

இயற்றியவர்

செ. ரூபசிங்கம் BSc. Dip. in ED. MEd.

நூலின் பெயர் : மன்னார் கோவிற்குளம் கற்பக விநாயகர்
திருவூஞ்சற் பாமாலை

பதிப்புரிமை : ஆசிரியருக்கு

முதற்பதிப்பு : 2011

ISBN : 978 : 955 : 98588 : - 5 - 0

இலங்கை தேசிய நூலக வெளியீட்டிலான பட்டியல் தரவு

ரூபசிங்கம். செ.

பக்கங்கள் : iv + 6

ISBN : 978 : 955 : 98588 : - 5 - 0

அச்சுப்பதிப்பு : கௌரி அச்சகம் 207, சேர் இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை, கொழும்பு 13

ஆன்மீகம் : சைவசமயம் : ஊஞ்சற்பாமாலை

வெளியீடு: மன்னார் கோவிற்குளம் கற்பகவிநாயகர் ஆலய பரிபாலனசபை

இலவச விநியோகத்துக்காக மட்டும்.

# என்னுரை

கடந்த இரண்டு தசாப்த காலங்களாக அறிவியல் துறையில் ஏறத்தாழ 25ற்கு மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ள எனது ஆன்மீகம் சார்ந்த முதலாவது வெளியீடு இது. எவ்வாறாயினும் கண்டி. அம்பிட்டி கத்தோலிக்க குருமட வெளியீடான நான் சஞ்சிகையில் எனது 15வது வயதில் என்னால் எழுதப்பட்ட சமயங்களின் சங்கமம் என்ற கட்டுரை 70களின் ஆரம்பத்தில் வெளியாகியிருந்தது. பின்னர் பேராதனைப்பல்கலைக்கழக இந்து மாணவர்சங்க வெளியீடான இந்து தருமம் மற்றும் தேசியப்பத்திரிகைகளான தினபதி சந்தாமணி வீரகேசரி தினகரன் ஆகியவற்றிலும் ஆன்மீகம் சார்ந்த எனது கட்டுரைகள் சில அவ்வப்போது வெளியாகி யிருந்தன. எவ்வாறாயினும் தொழில் ரீதியில் ஆசிரியனாக இருந்தமையும் தொழிலையே வாழ்வாக வரித்துக் கொண்டமை காரணமாகவும் விவேகானந்தருடைய பசியைத்தணிப்பதற்கான வழியைத்தேடிக் கொண்ட பின்னரே மக்களுக்கு ஆன்மீக விடயங்களை போதிக்க முடியும் என்ற கருத்தியலின் பாலான ஈர்ப்பு காரணமாகவும் என்னால் இது வரையில் ஆன்மீகம் சார்ந்த பிரசவங்களை நூல்வடிவில் தவழ விடமுடியாமலாய் விட்டது. ஆயினும் அறிவியல் பாடங்களைக்கூட இலக்கியச்சாயலில் ஆன்மீகப் பின்னணியுடன் நான் நடத்திச் செல்லும் பாங்கினை என்னிடம் பாடங்கேட்ட மாணவரும் எனது நூல்களை பயன் கொள்வோரும் அறிவர். இத்தகைய பின்னணியில் தொழில் கொள்ளும் மண்ணையே சோறுகிடைக்கும் இடத்தினையே சொந்த இடமாக கொள்ளும்போக்கு காரணமாக மன்னார் சித்திவிநாயகர் இந்துக்கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிவதனால் மன்னார் கோவிற்குளம் கற்பகப்பிள்ளையார்

மீது இத்திருவூஞ்சற்பாமாலையினை பாடவேண்டிய சந்தர்ப்பம் வாய்த்தது. கொடிய யுத்தத்தின் கொடூரமானவடுக்களை நீண்டகாலம் வடக்கினில் 4ம்கட்ட ஈழயுத்தத்தில் சுமந்து ஏறத்தாழ இரண்டுவருடங்களாக அலைந்து களைத்தவர்கள் கோவிற்குளத்து மக்கள். அவர்கள் தமது வாழ்விடங்களுக்கு மீண்ட போது முழுமையாக அழிக்கப்பட்ட அவர்களது இல்லிடங்களது எல்லைகளை தேடிப்பிடிப்பதை விடுத்து தமது குலதெய்வத்தின் ஆலயத்தினை தேடிச் சென்றனர் அங்கோ அதுவும் அழிந்து சிதைந்து கிடந்தது. இதில் குறிப்பிடத்தக்க வேடிக்கையானவிடயம் ஒன்றுமுள்ளது. அஷ்டபந்தனங்கள் அகற்றப்பட்டு யந்திரங்கள் கொள்ளையிடப்பட்டதுடன் காலங்காலமாக மூலவரை நோக்கி அமர்ந்திருந்த மூஷிகம் மூலவரை புறந்தள்ளி எதிர்திசையில் திரும்பி ஆலயச்சூழலில் முகாமிட்டிருந்த இராணுவத்தை நோக்கி திரும்பியிருந்தது. திருப்பி வைக்கப்பட்டிருந்தது. வக்கிரவுணர்வுகள் அந்நியரேயாயினும் மதிப்பளிக்க வேண்டிய ஆன்மீகத்திலும் வடிந்தோடியிருந்தன.

இந்நிலையில் அவ்வூரவர்களால் ஒருவருடகாலத்துள் ஆலயம் புனருத்தாரணம் பண்ணப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது. எனது இப்பாமாலையை யாத்துச் சமர்ப்பிக்கும் பேறு கிடைத்தது. பேராதனைப்பல்கலைக்கழக இந்துமாணவர்சங்க செயலாளராக பணிபுரிந்த காலப்பகுதியில் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ மா. த. ந. வீரமணிஐயருடன் தொடர்பு கொண்டு பேராதனைக்குறிஞ்சிக் குமரன்மீது ஊஞ்சற்பாமாலையை இயற்றுவித்து வெளியிட்ட காலப்பகுதியில் கிடைக்கப் பெற்ற அனுபவங்கள் வழி கற்பகனே அதனை பாடினான். இவன் வெறும் கருவிமட்டுமே. அவனது ஒடிக்கப் பெற்ற கொம்பினது ஒரு துாளி மட்டுமே.

செ.ரூபசிங்கம்

12.09.2011

## கல்வியியல் பேராசிரியர் சோ. சந்திர சேகரன் அவர்கள் அளித்த அணிந்துரை

இந்நூலின் ஆசிரியர் செ. ரூபசிங்கம் எனது மாணவன். தனது கல்வி முதுமாணிக்கற்கை நெறிக் காலப்பகுதியில் என்னிடம் கற்றவர். அவரது பெரிய தந்தையார் முன்னைநாள் நிலஅளவையாளர் நாயகம் மறைந்த செ. விசாகசுந்தரம் அவர்களது குடும்பத்தினருடன் எனக்கு நீண்டகால பரிச்சியமுண்டு. பேராசிரியர்களான வி. நித்தியானந்தம் அமரர் நரம்புசத்திர சிகிச்சை நிபுணர் வி. குணானந்தம் ஆகிய இருவரும் இவரது ஒன்றுவிட்ட சகோதரர்கள்.

செ. ரூபசிங்கத்தினால் ஆக்கப் பெற்ற இந்நூலில் அறிவியல் புலத்துக்கப்பாலான அவரது சில பதிவுகளை அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது. திருக்கேதீச்சரம் பெருங்கோவில். அதற்கு நிவந்தமாக விடப்பட்ட வயல்களைக் கொண்ட ஊராதலால் கோவிற்குளம் என்பது குறித்த ஊரினது பெயரிற்கானகாரணமாயிற்று .அங்கு கோவில் கொண்டுள்ள கற்பகப்பிள்ளையார் மீது இவ்வூஞ்சற்பாமாலை இயற்றப் பெற்றுள்ளது.

இந்து ஆலயங்களில் அவை மகோற்சவம் நடைபெறும் ஆலயங்களாயினும் அலங்கார உற்சவம் நடைபெறும் ஆலயங்களாயினும் திருவிழாக்காலங்களில் திருஊஞ்சல் நிகழ்வு பெரும்பாலும் நடைபெறுவதுண்டு. தெய்வத்தை ஊஞ்சலில் அமர்த்தி அடியவர்கள் ஆட்டிமகிழும் பாவனையில் இடம்பெறுவது. இந்நிகழ்வின் பொருட்டு பயன்படுத்தப்படுபவையே ஊஞ்சல் பதிகங்களாகும். திருவாசகம் சிலப்பதிகாரம் நந்திக்கலம்பகம் முதலான நூல்களில் தமிழிலக்கிய வடிவங்களில் ஒன்றாகிய திருவூஞ்சல் இடம்பெறுவதைக் காணலாம். பொன்னூசல் ஊசல்வரி என்னும் பெயர் தாங்கும் இவ்வகைப்பாடல்கள் ஆடுவோர் தாம்பாடும் வகையில்

யாக்கப் பெற்றவை. பண்டைத் தமிழர்தம்வாழ்வியல் கோலங்களை ஆலயங்களை மையமாகக் கொண்டு வளரத்தொடங்கிய காலப்பகுதிகளிலிருந்து அவர்களால் பாரம்பரியமாக ஆற்றப்பட்டு வந்த கலைகள் விளையாட்டுக்கள் போன்றவையும் தெய்வங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டமை தவிர்க்கப்படமுடியாத சில வரலாற்று வழக்குகளாயின. அந்தவகையில் திருவூஞ்சல் இலக்கிய வடிவம் பெறலாயிற்று.

பிற பக்தி இலக்கியங்களைப் போலவே தலவரலாறு, புகழ் பெருமை இயற்கை யெழில் மற்றும் சிறப்புக்கள் போன்றவற்றை திருவூஞ்சல்களும் பாடச்செய்வன. விருத்தத்தில் அல்லது கலித்தாழிசையில் அமைவதாயிருக்கும். முதலில் காப்பும் இறுதியில் மங்களமும் வரும். நூலின் ஆரம்பப் பாடல்கள் ஊஞ்சலின் கட்ட மைப்பையும் அடுத்துவருவன இறைவனது கோலச்சிறப்புக்களையும் அருட்திறன் களையும் வெளிப்படுத்துவனவாக அமையும்.

இத்திருவூஞ்சல்பாமாலை புறப்பொருள் வெளிப்பட ஆக்கப்பட்டுள்ள அதேவேளை அகப்பொருளும் இழையோடுவதாக அமைக்கப் பெற்றுள்ளது. 04வது பாடலில் இடம்பெற்றுள்ள **சீராய்** என்பது வாழ்த்துக்கு வாழ்த்தாக அமைகின்றது. 07வது பாடலில் நவக்கிரகங்கள் வருகின்றன. மங்களத்தில் வரும் வான்சேர்ந்த ஆன்மாக்கள் எல்லாம் என்பது சமகாலச் சமூகச்சூழலில் மிகஅண்மித்த நிகழ்வு களை நிழலாடச் செய்வனவாக இருக்கலாம். திருக்கேதீச்சரம் மற்றும் அயல்கிரா மங்களது சிறப்புகள் பேசப்பட்டுள்ளன. விநாயகரது நாமங்கள் ஆவளியாக் கப்பட்டுள்ளன. இவ்வாறே பிற பலசந்தர்ப் பங்களையும் குறிப்பிடக் கூடியதாக வுள்ளது. இவரது இலக்கியத்துறையிலான இம்முயற்சி ஆன்மீகம் அறிவியல் மற்றும் கல்வியியல் புலங்களை தழுவி ஒன்றிணைந்த பாங்கில் வளர வாழ்த்துகிறேன்.

பேராசிரியர் சோ. சந்திரசேகரன் 83 / 03 , 37 வது ஒழுங்கை, கொழும்பு 06

# மன்னார் கோவிற்குளம்
# கற்பக விநாயகர் திருவூஞ்சற் பாமாலை

இராகம் : மிஸ்ரஸாபு                                        தாளம் : ஆதி

## காப்பு

கலைமகளும் திருமகளும் மலைமகளும் உறையும்
கவின் கோவிற் குளமதில் கோயில் கொண்டு
நிலையான செல்வமும் கல்வியும் கலை ஞானமும்
கனிவுடன் கழல் இறைஞ்சுபவர்க் கருளும் கற்பகன்
தலையான தண்டமிழின் காவலன் கந்தனிடம்
விலையான ஞானப்பழம் வென்ற கற்பகன்
மேல் விருத்தமது எடுத்து ஊஞ்சலில் அமர்த்தி
பாமாலை பாட கற்பகக் களிறது காப்பதாமே

## நூல்

சுருதிகள் நான்கும் உறுதிமிகு கால்களதுவாக நாட்டி
கருத்துமிகு சிவாகமங்கள் இருபத்தெட்டும் விட்டமாக
திருமிகும் உபநிடதங்கள் நூற்றியெட்டும் இழைகளாக
விருப்புமிகு சங்கமத்து நாற்பாதங்கள் கயிறுகளாக
பொருள்மிகு புராணங்கள் பதினெட்டும் பலகைகளாக
கருப்பொருளாம் ஓங்காரமது பீடமாக இலங்க
தருக்கிழந்த திங்களின் தண்ணொளியில் கோவிற்குளம்
ஊருருறையும் கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 01

நட்டராகத்தில் நற்றமிழ் ஞானசம்பந்தன் பதிகம் பாட

நட்டபாடையில் நம்பியாரூரன் நத்தார்படை பாட

கெடிலவடவதிகை வீரட்டத்தாருடன் நாவுக்கரசன் பாட

ஊழிமலி திருவாதவூரன் குயிற்பத்தினில் பாட

அருண் மொழித்தேவரவர் எடுத்த மாக்கதையினில் பாட

தட்சிண கைலாய மான்மியமும் மாந்தைப் பள்ளும் பாட

திண்ணமாய் வீற்றிருந்த திருக்கேதீச்சரமது மருவிய

கோவிற் குளத்து கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 02

பாலியாற்று முருகன் சாமப் பண்ணிசைக்க

வெள்ளாங்குளத்து முருகன் துந்துபி முழங்க

நொங்கு வெட்டி ஐயனார் பரிவட்ட மேந்திட

ஆத்திமோட்டை காளியாத்தா ஆரத்தி எடுக்க

புதுக்குளத்து விநாயகர் மத்தளம் முழங்க

இலுப்பைக்கடவை முத்துமாரி முழவு கொட்ட

சவரிகுளத்து வைரவர் பிள்ளையார் வரவுரைக்க

கோவிற் குளத்து கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 03

வெண்சுடரும் செஞ்சுடரும் கவிகை தாங்க

சதுர் மறைசேர் தவமுனிவர் சார்ந்து போற்ற

இந்திரன் சாமரை யிரட்ட இயக்கர் வேந்தன்

எழில்மிகு சீராலவட்ட மெடுத்து வீச

கூராய்ப் பிள்ளையார் சீராய் வாழ்த்த

சென்றாரும் வந்தாரும் வாழ்த்தி வணங்க

பிரணவப் பொருளே சரவணன் தமையனே

கோவிற் குளத்து கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 04

ஐந்தொழில்களும் ஐந்து கரங்களாக
வாயு பகவனே இரண்டு கர்ணங்களுமாக
முகமலரே பிரணவப் பொருளது வாக
மூவுலகங்களும் பெரும்பேழை வயிறதுவாக
முப்புரி நூலது குண்டலினி நாகமதுவாக வாக
மூஷிகமே மலமது நீங்கிய ஆன்மாவாக
முப்பொருட் தத்துவக் கோலங் கொண்ட
கோவிற் குளத்து கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 05

பிரிவரிய தத்துவத்தின் பேதங் காட்டி
பேசரிய ஆன்மாவின் பிணிப்புங் காட்டி
தெரிவரிய அத்துவிதந் தெளியக் காட்டி
தேடரிய பேரின்பம் உயிர்கட் கீந்து
மருதநில வயல்களிடை கோவில் கொண்டு
அரு மருந்தாம் பக்தர் பெரு விருந்தாம்
மாமருந்தாம் நால் மறைப் பொருளாம்
கோவிற் குளத்து கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 06

இந்து வெனும் **திங்கள்** வெண்குடை தாங்க
கனியிதழ் **செவ்வாய்** சித்தியும் புத்தியும் கூட
பந்தமுடன் மதன் கரும்பு**தன்**னை வளைக்க
பரிந்து கலைச் செல்**வியாழன்** பாவிசைக்க
சுந்தரமாய் **வெள்ளி** மூஷிகமா **சனி**த்தே
பரிதியாம் **ஞாயிறு**டன் **இராகு**வும் **கேது**வும்
பைரவருடன் வயல் வெளிகளிடை வாழும்
கோவிற் குளத்து கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 07

அம்மையும் அப்பனும் ஓர் வடந் தொட்டாட்ட
மாலோடயனும் ஓர் வடந் தொட்டாட்ட
நாமகளும் பூமகளும் ஓர் வடந் தொட்டாட்ட
பாமரரும் பரமரும் ஓர் வடந் தொட்டாட்ட
இந்திரனும் இந்திராணியும் ஓர் வடந் தொட்டாட்ட
குறமகளும் குலமகளும் ஓர் வடந் தொட்டாட்ட
குமரனும் குவலயமும் ஓர் வடந் தொட்டாட்ட
கோவிற் குளத்து கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 08

மானாட மரையாட மஞ்சுதவழ் வான்விசும்பு
சுடர்களாட குஞ்சரங்களாட குழையாட
நஞ்சுகமழ் நாகங்களாட நெஞ்சினில் மரகதப் பச்சைப்
பதக்கமாட ஆனிரைகளாட வராகங்களாட
பச்சை மயில்களாட பாதச் சிலம்புகளாட
இடையினில் உத்தரீயமாட உகந்தடியார்
மனங்களாட மலர் மாலைகளாட மாமேருவாட
கோவிற் குளத்து கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 09

பால கணபதியே பக்தி கணபதியே ஆடீரூஞ்சல்
விக்ன கணபதியே வீர கணபதியே ஆடீரூஞ்சல்
தருண கணபதியே துண்டி கணபதியே ஆடீரூஞ்சல்
சக்தி கணபதியே சித்தி கணபதியே ஆடீரூஞ்சல்
ஏகாட்சர கணபதியே திரயாக்ஷர கணபதியே ஆடீரூஞ்சல்
துவிமுக கணபதியே மும்முக கணபதியே ஆடீரூஞ்சல்
சங்கடஹர கணபதியே சிங்க கணபதியே ஆடீரூஞ்சல்
கோவிற் குளத்து கற்பகக் களிறே ஆடீரூஞ்சல் 10

அறம்மேவும் வேதியரும் வாழி வாழி
நீதிநெறி நிலைநிறுத்தும் சத்திரியரும் வாழி வாழி
வாணிபம் பெருக்கும் வைஷியரும் வாழி வாழி
நாநிலம் தாங்கும் சூத்திரரும் வாழி வாழி
வான் சேர்ந்த வான்மாக்க ளெல்லாம் வாழி வாழி
வையகமும் வானகமும் வாழி வாழி
கலையும் கலைஞானமும் வாழி வாழி
கோவிற் குளத்து கற்பகக் களிறே வாழி வாழி 11

## மங்களம்

கோவிற்குளம்வாழ் தேவனுக்கு மங்களம்
கொழுக்கட்டைப் பிரியனுக்கு மங்களம்
கைத்தலம்நிறைகனி கொண்டவனுக்கு மங்களம்
கேட்பவர்வரமருளும் கேசவனுக்கு மங்களம்
கெண்டிக்காவிரியை விடுவித்தவனுக்கு மங்களம்
கூவும்குயிலின் குரலானவனுக்கு மங்களம்
குருசுக்குளம் மேவியமர்ந்தவனுக்கு மங்களம்
கீசகனைவதைத்தமால் மருகனுக்கு மங்களம்
கிண்கிணியின் தண்ணொளியானுக்கு மங்களம்
காக்கையுடன்மா பாரதம்பதிந்தவனுக்கு மங்களம்
கற்பகக் களிற்றுக்கு மங்களம் மங்களம் 12

இத் திருவூஞ்சற் பாமாலை மதுரைத் திருஞானசம்பந்தர் ஆதீன வித்துவான் வைரமுத்து முத்துச்சாமி கனகசுந்தரம் அவர்களின் பேரன் யாழ்ப்பாணம் வல்வையம்பதி செகராசசிங்கம் ரூபசிங்கத்தினால் யாக்கப் பெற்றது

## விளக்கக் குறிப்புகள்

பாடல் 01: சங்கமம் - அடியார் கூட்டம் : ஊஞ்சல் திருவிழா நடைபெறும் சதுர்த்தி திதி திங்கள் தருக்கிழந்த தினமாகும்.

பாடல் 02: அருண்மொழித் தேவர் - தெய்வச் சேக்கிழார்

எடுத்தமாகதை - பெரிய புராணம்

பாடல் 03: பாலியாறு, வெள்ளாங்குளம், ஆத்திமோட்டை, புதுக்குளம், இலுப்பைக் கடவை, சவரிகுளம் முதலானவை அயற் கிராமங்கள். இப்பாடலில் வரும் தெய்வங்கள் மேற்படி கிராமங்களில் கோவில் கொண்ட தெய்வங்களாவர்.

பாடல் 04: கூராய் என்பது அயலிலுள்ள கிராமங்களில் ஒன்று அங்கு பிள்ளையாருக்கு கோவில் உண்டு.

பாடல் 09: மஞ்சு - மேகம் : சுடர்கள் - நட்சத்திரங்கள்

பாடல் 12. : குருசுக்குளம் கோவிலிற் கணித்தாக உள்ள குளத்தினது பெயர்: கெண்டியுள் அடக்கப்பட்ட காவிரி விடுவிக்கப்பட்டமை அகத்தியரது வரலாற்றில் வரும் சம்பவம் : கிண்கிணி என்பது சலங்கை அது ஒலியெழுப்புவதுடன் ஒளியையும் உமிழ்வது : காக்கையுடன்மா பாரதம் பதிவு செய்தமை வியாசரது வரலாற்றால் அறியப்படுவது.



மன்னார் கோவிற்குளம்
கற்பகபிள்ளையார் கோவில்
முன்னைய தோற்றம்



2007 இல் விஞ்ஞான ஆசிரியர்க்கான தேசிய விருது
பெற்ற போது நூலாசிரியர்



2012 இல் தேசிய விஞ்ஞான விருது பெற்ற போது நூலாசிரியர்

லீமை அச்சகம், மன்னார். தொ.பே: 023 2251210.

ISBN 978-955-98588-5-